சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

சுயகற்றல் கைடேடு

அலகு 04 - இலங்கையில் விவசாயம்

தரம் 10

தொகுப்பு :- எஸ். எப். சில்மியா (கே/தெஹி/ திகலை த.வி)

புவியியல்

## ❖ சிறு ஏற்றுமதிப் பொருட்கள்

**பாரம்பரிய பிரதான வர்த்தகப் பயிர்களைவிடச் சிறு அளவில் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படுகின்ற பயிர்களைச் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் எனலாம்.**

- **சிறு ஏற்றுமதிப் பயிர்கள்**
  - மிளகு, கோப்பி, சாதிக்காய், கராம்பு, கறுவா,கொக்கோ
  - பூக்கள், காய்கறிகள், மிளகாய், வெற்றிலை, அலங்காரத் தாவரங்கள் (ஏற்றுமதிப் பயிர் பன்முகப்படுத்தல் திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட புதிய ஏற்றுமதிப் பயிர்கள்)
- **சிறு ஏற்றுமதிப் பயிர் ஆராய்ச்சி நிறுவனம் அமைந்துள்ள இடம்**
  - மாத்தளை
- **1960இன் பின்னர் இலங்கை அரசு சிறு ஏற்றுமதிப் பயிர்களில் விஷேட கவனம் செலுத்துவதற்கான காரணிகள்**
  - பாரம்பரிய ஏற்றுமதிகள் விலைத் தளம்பலுக்கு உட்படுகின்றமை.
  - தேயிலை, தென்னை, இறப்பர் போன்ற மரபு ரீதியான ஏற்றுமதியில் மாத்திரம் தங்கியிருக்க முடியாமையும் அவை பயிரிட முடியாத இடங்களில் சிறு ஏற்றுமதி பொருட்களைப் பயிரிட முடிந்தமையும்.
  - ஊடு பயிர்களாகச் சிறு ஏற்றுமதிப் பொருட்களை பயிரிட முடிந்தமை.
  - உலக சந்தையில் சிறு ஏற்றுமதிப் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தமை.
  - அந்நிய செலாவணி வருமாணம் தொடர்பாக பிரச்சினைகள் எழுந்தமை.
  - வேலை வாய்ப்புக்களை உருவாக்க முடிந்தமை.

- **சிறு ஏற்றுமதிப் பயிர்களின் பரம்பல்**
  - கறுவா – நீர்கொழும்பிலிருந்து மாத்தறை வரையுள்ள கடற்கரையோரத்தை சூழவுள்ள பகுதிகள், இரத்தினபுரி, அம்பாந்தோடடை.
  - கோப்பி – களுத்தறை, இரத்தினபுரி, கேகாலை, கம்பஹா, மாத்தளை, கண்டி.
  - மிளகு – மாத்தளை, கண்டி, கேகாலை.
  - ஏலம் - கண்டி, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை, மாத்தறை.
  - கராம்பு – மாத்தளை, கண்டி, கேகாலை.
  - சாதிக்காய் - மாத்தளை, கண்டி, இரத்தினபுரி
  - முந்திரி – மன்னார், அம்பாந்தோட்டை, புத்தளம், மட்டக்களப்பு.
  - சித்திரநெல்லா – மாத்தறை, அம்பாந்தோட்டை.
  - பூக்கள் - நுவரெலியா, பதுளை, பண்டாரவளை

## ❖ மரக்கறி வகைகளும், பழங்களும்.

- உணவுக்காக பல்வேறு மரக்கறிகளும் பழவகைகளும் நாடு முழுவதும் வியாபாரப் பயிராகவோ, உள்ளூர் பயிராகவோ, வீட்டுத்தோட்டப் பயிராகவோ, ஊடு பயிராகவோ பயிரிடப்படுகின்றன.
- **இலங்கையில் மரக்கறிச் செய்கையின் பரம்பல்**

| **ஆரம்பத்தில் இலங்கை மரக்கறி செய்கையுடன் தொடர்புடைய விஷேட பிரதேசங்கள்.** | **தொழில்நுட்ப முன்னேற்றதுடன் முக்கியம் பெற்றுள்ள பிரதேசங்கள்** |
|---|---|
| வறண்ட வலயம்<br>• முருங்கைக்காய், பூசணிக்காய், பறங்கி, தக்காளி, பயிற்றங்காய், கத்தரி, பாகற்காய், கெக்கரிக்காய்.<br>ஈர வலயம்<br>• வெண்டைக்காய், பயற்றங்காய், புடோலங்காய், பீர்க்கங்காய்.<br>மலை நாடு<br>• லீக்ஸ், கோவா, போஞ்சி, கரட், நோக்கோல், உருளைக் கழங்கு, பீட்ரூட். | • வெலிமடை, பண்டாரவலை, பதுளை, நுவரெலியா ஆகிய பிரதேசங்களில் மழை நீர், நீர்ப்பாசன முறைகளை பயன்படுத்தி வர்த்தக மட்டத்தில் மரக்கறி பயிரிடப்படுகினறது.<br>• பதுளை, மாத்தளை, கண்டி, ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம், மொனராகலை, அம்பாறை, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் உள்ளூர், வெளியூர் சந்தைக்காக மரக்கறிகள் பெரிய அளவில் பயிரிடப்படுகின்றன. |

## ❖ பழங்கள்

- ஆரோக்கியமான பழங்கள் அண்மைக் காலத்தில் இலங்கையில் பல இடங்களிலும் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பில் பயிரிடப்படுகின்றன.
- வர்த்தக பயிர்களாக வாழை, அன்னாசி, மாம்பழம், கொடிதோடை, திராட்சை, பப்பாசி, தோடை, ஆனைக்கொய்யா என்பன பயிரிடப்படுகினறன.
- நுகர்விற்காக நாட்டின் சகல பிரதேசங்களிலும் பழச் செய்கை இடம்பெறுகின்றது.
- வாழை - ஹம்பாந்தோட்டை, மொனராகலை, இரத்தினபுரி, யாழ்ப்பாணம்
- பியர்ஸ், திராட்சை, ஸ்ரோபரி – நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் பிரதானமாக பயிரிடப்படுகின்றன.
- இப் பழங்கள் துண்டுகளாக்கப்பட்ட பழங்களாகவும், தகரத்தில் அடைக்கப்பட்ட பழங்களாகவும், நீரகற்றப்பட்ட பழங்களாகவும், பதப்படுத்தப்பட்ட பழங்களாகவும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.